# Language Hindrance in Information and Communication Technology (ICT) usage and perception among the university students in Salem district

(தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்த சேலம் மாவட்ட கல்லூரி மாணவர்களிடையே மொழி இடையூறா – ஆய்வு)


வெ. இராஜமுனிசேகரன்* & முனைவர் சு. நந்தகுமார்**

Ph.D. Research Scholar & University Research Fellow,

Department of Journalism and Mass Communication,

Periyar University, Salem – 636011. <rajamunisekaran@yahoo.co.in>

**Associate Professor, Department of Journalism and Mass Communication,

Periyar University, Salem – 636011. nandakumar.su@gmail.com


## முன்னுரை:

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பயன்பாடு, மனிதர்களிடையே அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக தற்போது மாறிவிட்டது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதனை பயன்படுத்தாதவர்கள் எவரும் இல்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் கூட அறிந்தோ அறியாமலோ இதனை பயன்படுத்துகின்றனர், உதாரணத்திற்கு தொலைக்காட்சி (T.V.), செல்லிடப்பேசி (Cell Phone) முதலியன. சீனா (க்சுன் கே & ஜியேனிங் ருவான், 2010) ஜப்பான், கம்போடியா (ஜேம்ஸ் எட்வுட் & ஜார்ஜ் மெக்லீன், 2009) போன்ற நாடுகள் தங்களுடைய தாய்மொழியினை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி உபயோகப்படுத்துவது போல், நமது தமிழ் மொழியை அனைத்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களிலும் பயன்படுத்த வழி வகைகளை பல நிறுவனங்கள் செயல்படுத்தியுள்ளன.

இந்தக் கருத்தை முன்னிறுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான தொழில்நுட்பங்கள் இளைய சமூகத்தினரையே அதிலும் குறிப்பாக மாணவர்களை முதலில் சென்றடைகிறது(வேங்கடலட்சுமி & அம்புஜம் 2012). ஆங்கில மொழி ஆதிக்கம் அதிகரித்துள்ள நேரத்தில் தமிழினை தொழில்நுட்பங்களில் பயன்படுத்துவதால் அதனை உபயோகிப்பவர்கள் அதிகரித்தே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய இணையம் மற்றும் கைப்பேசி சங்கத்தின் குறிப்பு என்னவென்றால் உலகில் 40.4% சதவிகிதம் பேர் இணையத்தை பயன்படுத்துகின்றனர் அதிலும் குறிப்பாக நமது இந்தியாவில் இரண்டு கோடியே நாற்பத்தி மூன்று லட்சம் (243 மில்லியன்) மக்கள் ஜூன் வரை பயன்படுத்தியதாக சொல்கிறது (2014, Jan 29, Times of India & PTI). செல்லிடப்பேசி, கணிப்பொறி, இணையம் உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருவிகளில் மாநில மொழியான தமிழை புகுத்தியதால் இவைகளின் பயன்பாடு அதிகரித்தே உள்ளது (வேங்கடலட்சுமி & அம்புஜம் 2012).

## ஆய்வின் முன் வரலாறு (Review of related literature)

இணையம் பயன்படுத்துவதால் இந்த உலகமே ஒரு கிராமம் போல் சுருங்கிவிட்டது என்று மார்ஷல் மக்லுஹன் சொன்னது தற்போது உறுதியாகிவிட்டது. அவி கோல்ட்பார்ப் & ஜெப் பிரின்ஸ் (2008) அமெரிக்காவில் இணைய பயன்பாடு அதை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தகவல் பரவல்களின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் ‘எழுதப்படிக்க தெரியாவிட்டாலும் அடித்தட்டு மக்களே இணையத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர், மேல் வர்க்கத்தினர் பணம் சம்பாதிக்க அதிக நேரம் செலவிடுவதால் இணையத்தை அதிகம் பயன்படுத்துவதில்லை. மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பயன்பாடுகள் குறித்து பர்ஹத் பஷீர் & முஜிபுல் ஹாசன் சித்திக் (2012) மேற்கொண்ட ஆய்வில் அனைத்து வாய்ப்புகள் இருந்தும் பெண்கள் இணையத்தை அதிக முறை மற்றும் நேரத்தில் பயன்படுத்துவதில்லை. ஆங்கிலம் தெரியாவிட்டாலும் ஆண்கள் இணையத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. ராஜி & கோட்ஸி (2008), வாழும் இடமும், மொழியும், சமுதாய அந்தஸ்தும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்துவோரிடையே வேற்றுமையை உருவாக்குகிறது என்று தனது ஆய்வின் மூலம் குறிப்பிடுகிறார். கேரளாவில் பட்டப்படிப்பு கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவிகள் குறைவாகவே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்துகின்றனர் என்றும், மொழி ஒரு தடையாக உள்ளதாகவும், ஆனால் மாணவர்கள் குறைந்தது 4 லிருந்து 5 மணி நேரம் வரை செல்லிடப்பேசி மற்றும் இணையத்தை பயன்படுத்துகின்றனர் என்பதை தனது ஆய்வில் கண்டறிந்தார். கிட்டுயி – க்வாகே எ. & அடிகன் எம்.ஓ. (2008) கென்யாவில் பெண்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்த கல்வியும், மொழிப் புலமையும், தகவல்களை தேடும் எண்ணமும் மற்றும் நல்ல சமூக சூழ்நிலையும் தேவை என்று கூறியுள்ளார். முஹம்மது அக்ஸாபி, ஜாவத் கலத்பாரி & முஸ்தபா அக்ஸாபி (2011), மாணவர்களின் செல்லிடப்பேசியில் எந்த அளவுக்கு பயன்படுத்துகின்றனர் மற்றும் அவர்களின் சுய திறன் மேம்பாடு எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை பற்றி ஆய்வு மேற்கொண்டனர். மாணவர்கள் உற்சாகத்தோடும், முனைப்போடும் இந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்த எண்ணுகின்றனர் என்றும், அதே நேரத்தில் மொழி அவர்களுக்கு ஒரு தடையாக இருந்தாலும் அதை பயன்படுத்துவதால் சந்தோஷமடைகின்றனர் என்பதை கண்டறிந்துள்ளார். ஜோஹன்னஸ் க்ரோஞ் (2009) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்துவதில் மொழியினால் உண்டாகும் தடைகள் என்பது பற்றிய தனது ஆய்வில், என்னதான் அனிமேஷன் கிராபிக்ஸ் உள்ளிட்ட விஷயங்களை மக்களுக்கு எளிதாக புரியும்படி அளித்தாலும் அராபிய மொழியை உபயோகிக்க ஏதுவாக வழங்குவதற்கு ஈடாகாது என்கிறார்.

## நோக்கங்கள் (Objectives)

1. மாணவர்கள் பெற்றிருக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகள் நிலையினை கண்டறிதல்.
2. மாணவர்களிடையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாட்டினை அறிதல்.
3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை தமிழ் மூலம் பயன்படுத்துவதால் அவர்கள் பெறும் நன்மைகள் மற்றும் எண்ணங்களை (பார்வையை) தொழில்நுட்ப ஏற்பு முறையின் (Technology Acceptance Model) துணை கொண்டு விவரித்தல்.

## ஆய்வுக் கேள்விகள் (Research Questions)

1. மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பெற்றுள்ளனரா?
2. மாணவர்களிடையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாடுகள் எவ்வாறு உள்ளது?
3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்த மாநில மொழி (தமிழ்) தடையாக உள்ளதா?

## ஆய்வு திட்ட அமைப்பு (Research methodology)

மேலே குறிப்பிட்டுள்ள இந்த ஆய்வுக் கட்டுரைகள் உறுதுணையோடு வழிக்காட்டுதலோடு மேற்கூறிய ஆய்வு இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றின் தன்மைகளை உறுதிப்படுத்த அளந்தரிக்கை ஆய்வு முறை (Survey Method) பயன்படுத்தப்பட்டது. இம்முறை நிகழ்காலத்தோடு பெரிதும் தொடர்புடையது என்பதால் இது தெரிவு செய்யப்பட்டது. இந்த முறையில் 100 வினாப்பட்டியல்களை 5 கல்லூரி மாணவர்களிடையே பகிர்ந்து வழங்கி அதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட ஐந்து கல்லூரிகளை இயைபில்லா மாதிரி முறையில் (ரேண்டம் முறை) தேர்வு செய்து, பின்னர் நேரிடையாக அக் கல்லூரிகளுக்கு சென்று வசதி முறையில் (convenience sample method) மாணவர்களிடம் வினாப்பட்டியல்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் சமூக அறிவியலுக்கான SPSS மென்பொருள் மூலம் கணக்கீடு செய்து பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## கோட்பாடுகள் (Theory)

பிரெட் டேவிஸ் (1991) ஆம் ஆண்டு தனது ஆய்வுக் கட்டுரை மூலம் ஒரு தனி நபரின் கணிப்பொறி பயன்பாடும், செயல்பாடுகளும் மற்றும் அவர்களுடைய மனோபாவத்தை புரிந்துக்கொள்ள ஏதுவாக தொழில்நுட்ப ஏற்பு முறையினை (Technology Acceptance Model) தந்துள்ளார். இந்த முறை அஜ்சன் (Ajzen) மற்றும் பிஷ்பீன் (Fishbein) ஆகியோருடைய ‘தியரி ஆப் ரீசன்ட் அக்சன்’ (Theory of

Reasoned Action) மற்றும் 'தியரி ஆப் ப்ளேன்ட் பிகேவியர்' (Theory of Planned Behaviour) ஆகியோரின் கோட்பாடுகளை முன் மாதிரியாக வைத்து, மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப உபயோகம், பயன்பாடு, மற்றும் அவர்களின் மனோபாவம் போன்ற மாறிகள்(variables) இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### தகவல் பகுப்பாய்வு மற்றும் விவரித்தல் (Data analysis and interpretation)

100 மாணவர்களிடம் பெறப்பட்ட 100 தரவுகள் (54 மாணவர்கள் மற்றும் 46 மாணவியர்கள்) சமூக அறிவியலுக்கான புள்ளியியல் (SPSS) மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவர்களில் 28% பேர் முதுகலைப் பயிலும் மாணவர்கள் மற்றும் 72% பேர் பட்டதாரி மாணவர்கள். 96% பேர் திருமணம் ஆகாதவர்கள் 4% பேர் மட்டும் திருமணமானவர்கள்.

1. மாணவர்கள் அனைவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பெற்றுள்ளனரா? என்ற ஆய்வுக் கருதுகோளுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்தததில், அனைத்து மாணவர்களும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளில் ஒன்றை தன் வசம் வைத்துள்ளனர் அவர்களில் 84% (சதவிகிதம்) பேர் தம் வசம் செல்லிடப்பேசியையும், கணிப்பொறியையும் வைத்துள்ளனர். இவர்களில் 82 சதவிகிதம் பேர் தமிழக அரசின் மடிக்கணினி திட்டம் மூலம் பயன்பெற்றுள்ளனர், 6 சதவிகிதம் பேர் சுயமாக வாங்கியுள்ளனர், ஆனால் 12 சதவிகிதம் பேரிடம் மடிக்கணினியோ, கணிப்பொறியோ எதுவும் இல்லை என்பது குறிப்படத்தக்கது.

2. மாணவர்களிடையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாடுகள் எவ்வாறு உள்ளது? என்ற கேள்விக்கு முதல் கேள்வியின் பதில் உறுதுணையாக எடுத்து ஆராய்ந்ததில். இவர்களில் 84% சதவிகிதம் பேர் ஏனைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பெற்றிருந்தாலும், பெரும்பாலானோர் (72%) இணையத்தை மட்டும் பயன்படுத்துகின்றனர். இவர்கள் தினமும் சராசரியாக 7 மணி நேரம் வரை இணையத்தை பயன்படுத்த நேரத்தை செலவழிக்கின்றனர். 14 சதவிகிதம் பேர் மட்டுமே 8 முதல் 12 மணி நேரம் வரை இணையத்தில் செலவழிக்கின்றனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளான தனி நபர் மேசை கணினி, மடிக்கணினி, கைப்பேசி, டேப்லேட் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட கருவிகளில் 68 சதவிகிதம் பேர் மூன்று வருடங்களுக்கு மேல் இணையத்தை பயன்படுத்துகின்றனர். எட்டு சதவிகிதம் மாணவர்கள் மட்டுமே மூன்று மாதங்களிலிருந்து 1 வருடம் வரை உபயோகிப்பவர்கள்.

3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்த மொழி இடையூறா குறித்து ஆராய்ந்ததில், 82 சதவிகிதம் பேர் தமிழில் உபயோகப்படுத்துவது தான் எளிது என்றும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை தனித்திரனோடு பயன்படுத்த தமிழ் தான் சிறந்த வழி என்று 62 சதவிகிதம் பேரும், தமிழில் இருந்தால் மட்டுமே எந்த விதமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளையும் பயன்படுத்த கற்றுகொள்ளலாம் என்று 72 சதவிகிதம் பேரும் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் எத்தகைய தொழில்நுட்பங்கலானாலும் தாய்மொழியில் இருந்தால் அவைகளை எளிதாக பயன்படுத்த முடியும்.

## முடிவுரை (conclusion)

மாணவர்களுடைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்தும் திறன்கள், ஆங்கிலத்தை தவிர, தமிழ் மொழியில் உபயோகிப்பது எளிதாக உள்ளதாக பெரும்பான்மையானவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இவர்கள் இத் தொழில்நுட்பங்களை தினந்தோறும் உபயோகித்துவருகின்றனர். தமிழே அவர்களின் பிரதான தேர்வாக உள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பாமரன் முதல் பணக்காரன் வரை, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, படித்தவன் முதல் படிக்காதவன் வரை அனைத்து தரப்பினரிடமும் சென்று சேர தாய் மொழி மூலம் அவைகள் இயக்கப்பட வேண்டுமென இவ்வாய்வு தெரிவிக்கிறது.

## References:


Avi Goldfarb, & Jeff Prince (2008). Information Economics and Policy 20 (2008) 2–15. Retrieved from www. elsevier.com/locate/iep. 30/09/2013, 5.55 pm

Cronje, J. C. (2009). Qualitative assessment across language barriers: An action research study. Educational Technology & Society, 12 (2), 69–85.

Davis, F.D. (1991) User acceptance of information technology: system characteristics, user perceptions and behavioural impacts. International journal of Man-Machine Studies, 1993, 38, 475 – 487.

Farhat Bashir, Dr. Mujibul Hassan Siddiqui (2012). Usage of ICT by the Students in Higher Secondary Schools of Jammu and Kashmir. IOSR Journal of Humanities and Social Science (JHSS). Volume 4, Issue 2 (Nov. - Dec. 2012), PP 37-41 www.Iosrjournals.Org

Internet and Mobile Association of India (2014, Jan 29). India to have 243 million internet users by June 2014: IAMAI, PTI. Retrieved from http://timesofindia.indiatimes.com/tech /tech-news/India-to-have-243-million-internet-users-by-June-2014-IAMAI/articleshow/29563698.cms

James Edwood & George MacLean (2009). International Journal of Emerging Technologies and Society (IJETS), Vol. 7, No. 2, 2009, pp: 65 – 82. Retrieved from http://unpan1.un.org/intradoc/groups/public/documents /unpan/unpan046135.pdf

Kituyi-Kwake, A. and Adigun, M.O. (2008). Analyzing ICT use and access amongst rural women in Kenya. International Journal of Education and Development using Information and Communication Technology (IJEDICT), 2008, Vol. 4, Issue 4, pp. 127-147.

Mohammad Akhshabi, A. , Javad Khalatbari, B., Mostafa Akhshabi (2011). An experiment on conducting mobile learning activities on the virtual university. Procedia - Social and Behavioral Sciences 28 (2011) pp. 384 – 389 1877-0428 doi:10.1016/j.sbspro. 2011.11. 073

Raji & Godsy (2010). Society for the Promotion of Alternative Computing and Employment (SPACE) report, Thiruvananthapuram. Retrieved from http:/www.space-kerala.org.

Venkatalakshmi & Ambujam (2012). Information and Communication Technology use Frameworks among Self-Help Group Women. European Journal of Social Sciences Vol.27 No.2 (2012), pp.206-212. Retrieved from http://www.shgportal.com/img/content/EJSS_27_2_07.pdf

Xun Ge & Jiening Ruan (2010). Integrating Information and Communication Technologies in Literacy Education in China. Retrieved from http://www.ou.edu/uschina/ICT%20Chinese%20 Literacy.pdf